**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 26.02.2021–ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : 26.02.2021 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆடு வதை சாலையில் வசூல் செய்யும் உரிமை மற்றும் தினசரி மார்கெட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 15 கசாப்புக் கடைகளின் கட்டணம் வசூல் செய்தல் இனத்திற்கு 2021–22–ஆம் ஆண்டிற்கு வசூல் செய்யும் உரிமைக்கு 26.2.2021–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்சக் கேள்வித் தொகை |
|---|---|---|
| 1) | திருமதி எஸ். ராஜேஸ்வரி, க/பெ. சபரிநாதன்,<br>51, செம்மலை தெரு | ரூ. 2,50,000/– |
| 2) | திரு சி. சரவணக்குமார், த/பெ. சந்திரசேகர்,<br>60/2, தட்டான்குட்டை ரோடு, இராசிபுரம். | ரூ. 5,45,400/– |
| 3) | திரு கே. லட்சுமணன், த/பெ. கிருஷ்ணன்,<br>7, பழனி தெரு, இராசிபுரம். | ரூ. 5,51,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி திரு கே. லட்சுமணன் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ஆடு வதை சாலையில் வசூல் செய்யும் உரிம இனத்திற்கு சுங்கம் வசூல் செய்யும் இனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வியாக ரூ. 5,51,000/– என திரு கே. லட்சுமணன் என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2020–21–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 226013/–ஐ விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகை ரூ. 215421/–ஐ விட கூடுதலாகவும், அரசு மதிப்புத் தொகை ரூ. 237500/– கூடுதலாகவும் உள்ளது. எனவே, உச்சக் கேள்வித் தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 969**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்கெட்டிலுள்ள கோழிக்கடைகள் மற்றும் மீன் கடைகள் மற்றும் நகர எல்லைக்குள் உள்ள கோழிக்கடை வைத்து வியாபாரம் செய்பவர்கள் வசம் கட்டணம் வசூல் செய்தல் இனத்திற்கு 2021–22–ஆம் ஆண்டிற்கு வசூல் செய்யும் உரிமைக்கு 26.2.2021–ஆம் தேதியன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்சக் கேள்வித் தொகை |
|---|---|---|
| 1) | திரு சி. சரவணக்குமார், த/பெ. சந்திரசேகர்,<br>60/2, தட்டான்குட்டை ரோடு, இராசிபுரம். | ரூ. 5,45,400/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி திரு சி. சரவணக்குமார் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** தினசரி மார்கெட்டிலுள்ள கோழிக்கடைகள் மற்றும் மீன் கடைகள் மற்றும் நகர எல்லைக்குள் உள்ள கோழிக்கடை வைத்து வியாபாரம் செய்பவர்கள் வசம் கட்டணம் வசூல் செய்தல் உரிம இனத்திற்கு உச்சக்கேள்வியாக ரூ. 5,45,400/– என திரு சி. சரவணக்குமார் என்பவர் கோரியுள்ளார். இது சென்ற 2020–21–ஆம் ஆண்டு உரிமத் தொகை ரூ. 137813/–ஐ விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகை ரூ. 131354/– கூடுதலாகவும், அரசு மதிப்புத் தொகை ரூ. 145000/–ஐ கூடுதலாகவும் உள்ளது. எனவே, உச்சக் கேள்வித் தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 970**

அனுமதிக்கப்பட்டது.

( 3 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமைக்கு 26.2.2021–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்சக் கேள்வித் தொகை |
|---|---|---|
| 1) | திரு பி. சரவணன், த/பெ. சுப்ரமணியன்,<br>E.R.A. ராமலிங்கம் தெரு, இராசிபுரம். | ரூ. 10,04,645/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வி திரு பி. சரவணன் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** புதிய பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பிடம் வசூல் செய்யும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வியாக ரூ. 10,04,645/– என திரு சி. சரவணன் என்பவர் கொடுத்துள்ளார். இது சென்ற 2020–21–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 953662/–ஐ விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகை ரூ. 908971/–ஐ விட கூடுதலாகவும் உள்ளது. கேள்வித் தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 971**

அனுமதிக்கப்பட்டது.

( 4 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகளில் மட்டும் தட்டில் முறுக்கு விற்பனை செய்து கொள்ளும் உரிமைக்கு 26.2.2021–ஆம் தேதியன்று நடைபெற்ற ஏல மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | உச்சக் கேள்வித் தொகை |
|---|---|---|
| 1) | திரு எ. அறிவழகன், த/பெ. அருணாசலம்,<br>கவலேத்துக்காடு | ரூ. 3,00,000/– |

| | | |
|---|---|---|
| 2) | திருமதி எஸ். ராஜேஸ்வரி, க/பெ. சபரிநாதன், 51, செம்மலை தெரு | ரூ. 3,25,000/– |
| 3) | திரு எஸ். கார்த்திகேயன், 2எ, வி. நகர் ரோடு எண். 7, இராசிபுரம், | ரூ. 3,51,000/– |

மேற்கண்ட ஏலக் கேள்வியில் உச்சக்கேள்வி திரு எஸ். கார்த்திகேயன் என்பவர் கோரியுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகளில் மட்டும் தட்டில் முறுக்கு விற்பனை செய்து கொள்ளும் உரிமைக்கு ஒப்பந்தப்புள்ளியில் உச்சக்கேள்வியாக ரூ. 3,51,000/– என திரு எஸ். கார்த்திகேயன் என்பவர் கோரியுள்ளார். இது சென்ற 2020–21–ஆம் ஆண்டின் உரிமத் தொகை ரூ. 319725/–ஐ விட கூடுதலாகவும், மூன்றாண்டு சராசரித் தொகை ரூ. 304741/–ஐ விட கூடுதலாகவும் உள்ளது. எனவே, உச்சக் கேள்வித் தொகையினை உறுதி செய்வது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 972**

அனுமதிக்கப்பட்டது.

(5) நகராட்சிக்குச் சொந்தமான நகர எல்லைக்குள் தள்ளுவண்டி மூலம் பல்பொருட்கள் விற்பனை செய்யும் சுங்கம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 26.2.2021–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1) | திரு எ. அறிவழகன், த/பெ. அருணாசலம், கவலேத்துக்காடு | ரூ. 8,01,000/– |
| 2) | திரு கே. செல்வக்குமார், த/பெ. பி. கந்தசாமி, 43, காட்டூர் காட்டுக்கொட்டாய் | ரூ. 8,10,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

**அலுவலகக் குறிப்பு :** நகர எல்லைக்குள் தள்ளுவண்டி மூலம் பல்பொருட்கள் விற்பனை செய்யும் உரிமத்திற்கு சென்ற 2020–21–ஆம் ஆண்டிற்கான தொகையைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை வரப்பெற்றுள்ளதால் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 973**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான பிரதி வாரம் செவ்வாய் வார சந்தை குத்தகை உரிமத்திற்கு 2021–22–ஆம் ஆண்டிற்கு வசூல் செய்யும் உரிமைக்கு 26.2.2021–ஆம் தேதியன்று நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது. அதன் விவரம் கீழ்வருமாறு.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1) | திரு கே. நடேசன், த/பெ. குழந்தைவேல், கோனேரிப்பட்டி | ரூ. 5,05,000/– |
| 2) | திரு ஆர். தியாகராஜன், 34/1, நாச்சியப்பபட்டியார் தோட்டம். | ரூ. 5,00,000/– |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

**அலுவலகக் குறிப்பு :** பிரதி வாரம் செவ்வாய் வார சந்தை குத்தகை இனத்திற்கு வசூல் செய்யும் உரிமைக்கு சென்ற 2020–21–ஆம் ஆண்டிற்கு தொகையைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை வரப்பெற்றுள்ளதால் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 974**

அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களில் 26.2.2021 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்ற ஏலத்தில் கீழ்கண்ட இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை. அதன் விவரம் கீழ்வருமாறு.

**வ.எண். குத்தகை இனம்**

1) தினசரி சந்தை சுங்கம் வசூல் செய்யும் உரிமம்
2) பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகளின் சுங்கம் வசூலிக்கும் உரிமம்
3) பேருந்து நிலையத்தின் ஒலிபெருக்கி விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம்
4) தினசரி மார்கெட் கட்டண கழிப்பிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம்
5) புதிய பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனங்களை சுங்கம் வசூலிக்கும் உரிமம்
6) பழைய பேருந்து கட்டண கழிப்பிடம் சுங்கம் வசூலிக்கும் உரிமம்

**அலுவலகக் குறிப்பு :** மேற்கண்ட இனங்களுக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர முன்வராததால் மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 975**

அனுமதிக்கப்பட்டது.

( 8 ) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.9464/2020/மா.ந. அ3 நாள் 30.09.2020–இல் கோரியுள்ளவாறு இந்நகராட்சியில் பணிபுரிந்து வந்த திரு க. பிரகாஷ் அவர்கள் தனது குடும்ப சூழ்நிலைக் காரணமாக சேலம் மாநகராட்சிக்கு அயர் பணியாக (Deputation) இட மாறுதல் பெற்று 15.03.2017–ஆம் தேதி முதல் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார்.

தற்போது சேலம் மாநகராட்சியில் காலியாக உள்ள சுகாதார ஆய்வாளர் பணியிடத்தில் நிரந்தரமாக பணிபுரிய அரசாணை பெற வேண்டி இருப்பதால் நகராட்சி

அலகிலிருந்து மாநகராட்சி அலகிற்கு மாற்றிக் கொள்ள இசைவுக் கடிதம் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(270/21/சி1)

**தீர்மானம் எண். 976**

அனுமதிக்கப்பட்டது.

(9) இந்நகராட்சி அண்ணாசாலை தொடக்கப் பள்ளியில் முன்புற சுற்றுச்சுவர், மாடிப்படி மற்றும் அறை அமைக்க ஆகும் ரூ. 350000/– (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீட்டுப் பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியும், பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்ற அங்கீகாரமும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 350000/– மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(615/21/இ1)

**தீர்மானம் எண். 977**

அனுமதிக்கப்பட்டது.

(10) இந்நகராட்சி வார்டு எண். 25 காளியம்மன் கோவில் தெரு, வார்டு எண். 24, மாதா கோவில் தெரு கழிப்பிடங்களுக்கு அடிப்படை வசதிகள் மேம்படுத்த தயாரிக்கப்பட்ட ரூ. 2.00 லட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்ற அங்கீகாரமும், பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு அனுமதி வழங்கலாம்.
ஆ) சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
இ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(616/21/இ1)

**தீர்மானம் எண். 978**

அனுமதிக்கப்பட்டது.

(11) இந்நகராட்சி வார்டு எண். 6 கிருஷ்ணன் தெரு மற்றும் வார்டு எண். 10, வி. நகர் ரோடு எண். 17 ஆகிய கழிப்பிடங்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்த தயாரிக்கப்பட்ட ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்ற அங்கீகாரமும், பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியும் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்.
ஆ) சுகாதாரப் பணிகளின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
இ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(617/21/இ1)

**தீர்மானம் எண். 979**

அனுமதிக்கப்பட்டது.

(12) “ சுவாசம் “ திட்டத்தின் (SuWaSem) கீழ் இராசிபுரம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையத்தில் மழைநீர் சேகரிப்பு அமைப்பினை ஏற்படுத்தி அருகிலுள்ள மூலைக்கிணற்றின் நீர்மட்டத்தை உயர்த்தும் பணி மேற்கொள்ள 04.02.2021–ஆம் தேதி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின் வருமாறு. மதிப்பீடு ரூ. 9.90 இலட்சம்.

| | | |
|---|---|---|
| 1) திரு ஜெ. ரவிச்சந்திரன், ஆர். கவுண்டம்பாளையம் | – | மதிப்பீட்டைவிட 1.68% அதிகம். |
| 2) திரு என். செல்லப்பன், இராசிபுரம் | – | மதிப்பீட்டைவிட 0.18% குறைவு. |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.18% குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு என். செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியின் 50% செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(118/19/இ2)

**தீர்மானம் எண். 980**

அனுமதிக்கப்பட்டது.

(13) நாமக்கல் மாவட்ட ஆட்சியரகத்தில் 21.08.2020 அன்று கோவிட் 19 பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மேற்கொள்ளப்பட உள்ளதால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களது அறிவுரையின்படி, முன்னேற்பாட்டுப் பணிகள், அலங்காரப் பணிகள் மற்றும் பத்திரிக்கையாளர்கள் மேடை ஆகியவைகளை அமைக்கும் பணி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு எண். 15–இன்கீழ் மேற்கொள்ளப்பட்டது.

அதற்கான செலவினம் ரூ. 99456/– நாவல் அன்ட் கோ., சாலைப்புதூர், ஈரோடு மாவட்டம் அவர்களுக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. மேலும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 99456/– செலவினத்தை மன்றம் பதிவு செய்யலாம்.

ஆ) வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2733/20/இ1)

**தீர்மானம் எண். 981**

அனுமதிக்கப்பட்டது.

(14) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் TNSUDP 2020–21 சாலைகள் மேம்பாட்டுத் திட்டப் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (E-Procurement Notice) தேசிய அளவில் மற்றும் மாநில அளவில் 29.01.2021 அன்று நாளேடுகளில் கீழ்கண்டுள்ளவாறு வெளியிடப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1) | இந்தியன் எக்ஸ்பிரஸ் (தேசிய அளவில்) | ரூ. 1328832/– |
| 2) | தினமலர் (தமிழ் நாடு) | ரூ. 351936/– |
| | மாநில சரக்கு மற்றும் சேவை வரி 2.5 % | ரூ. 42019/– |
| | மத்திய சரக்கு மற்றும் சேவை வரி 2.5 % | ரூ. 42019/– |
| | மொத்தம் | ரூ. 1764806/– |

ரூ. 1764806/– விளம்பர வெளியீட்டு நிறுவனம் M/s. Flame Advertising Co. Private Limited, சென்னை அவர்களுக்கு, சாலை மேம்பாட்டுத் திட்டத் தொகையிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 1764806/– சாலை மேம்பாட்டுத் திட்டத் தொகையிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

(1335/20/இ1)

**தீர்மானம் எண். 982**

அனுமதிக்கப்பட்டது.

(15) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, நாமகிரிப்பேட்டை, பட்டணம், சீராப்பள்ளி, ஆர். புதுப்பட்டி, வெண்ணந்தூர், பிள்ளாநல்லூர், அத்தனூர் மற்றும் மல்லசமுத்திரம் பேரூராட்சிகள் மற்றும் இராசிபுரம், வெண்ணந்தூர், நாமகிரிப்பேட்டை மற்றும் புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 823 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் எலச்சிப்பாளையம், மல்லசமுத்திரம், பரமத்தி ஒன்றியங்களுக்குட்பட்ட 724 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த அரசாணை எண். (எம்.எஸ்) 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (குவ1) துறை நாள் 15.02.2021–இல் ரூ. 932.80 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இக்கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இராசிபுரம் நகராட்சிக்கு திட்ட மதிப்பீட்டில் பங்குத் தொகையாக ரூ. 149.97 கோடியும், ஆண்டு பராமரிப்புக் கட்டணமாக ரூ. 4.15 கோடியும் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

செயற் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கழிவுநீர் கோட்டம், இராசிபுரம் அவர்களது கடித எண். 80/F.CWSS Rasipuram/DO/SEN/RPM/2021 நாள் 24.02.2021–இல் கூட்டுக் குடிநீர் திட்டப் பணிகளைத் தொடங்க நிதி ஒதுக்கீடு பெற்றுத் தருமாறு கோரப்பட்டுள்ளது. அதன்படி, இராசிபுரம் நகராட்சியின் திட்ட மதிப்பீட்டு பங்குத் தொகை மற்றும் ஆண்டு பராமரிப்புக் கட்டணம் ரூ. 154.12 கோடி தொகையை டுபிட்கோ (TUFIDCO) நிறுவனத்திடமிருந்து மான்யமாக வழங்க திட்டப்பிரேரணை நகராட்சி நிர்வாக

ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. அரசாணை எண். (எம்.எஸ்) 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (குவ1) துறை நாள் 15.02.2021 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) இராசிபுரம் நகராட்சியின் திட்ட மதிப்பீட்டு பங்குத் தொகை மற்றும் ஆண்டு பராமரிப்புக் கட்டணம் ரூ. 154.12 கோடி டுபிட்கோ நிறுவனத்திடமிருந்து மான்யமாக வழங்க திட்டப்பிரேரணை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்ற அனுமதிக்கலாம்.
ஆ) அரசாணையை மன்றம் பதிவு செய்யலாம்.

(இ2/1742/18)

**தீர்மானம் எண். 983**

அனுமதிக்கப்பட்டது.

( 16 ) இந்நகராட்சிப் பகுதியில் ஏற்கனவே வழங்கங்கப்பட்டுள்ள குடிநீர் இணைப்புகள் 053/1 முதல் 053/8974–இன் நிலுவை வைப்புத் தொகையினை வசூலிக்க குடிநீர் இணைப்பு உரிமையாளர்களிடம் அறிவிப்பு வழங்க 7000 அறிவிப்புகள் அச்சிட்டு வழங்கும் பணி மேற்கொள்ள விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன.

| வ. எண். | அச்சக உரிமையாளர் விவரம் | அறிவிப்பு அச்சிட (ஒன்றின் விலை) ரூ. |
|---|---|---|
| 1 | வெண்ணிலா அச்சகம்,<br>புதுப்பாளையம் ரோடு, இராசிபுரம். | 1.30 |
| 2 | ஸ்ரீ பண்ணாரி அம்மன் பிரிண்டர்ஸ்,<br>பெரிய கடை வீதி, இராசிபுரம். | 1.25 |
| 3 | கிரித்திக் கார்ட்ஸ், பெரிய கடை வீதி,<br>இராசிபுரம். | 1.18 |

பெறப்பட்ட 3 விலைப்புள்ளிகளில் கிரித்திக் கார்ட்ஸ், இராசிபுரம் என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளி ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம்.

(5127/20/இ2)

**தீர்மானம் எண். 984**

அனுமதிக்கப்பட்டது.

( 17 ) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஆண்டு குத்தகை இனங்களுக்கு 2021–22 ஆண்டிற்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிக் கோர விளம்பரம் செய்தமைக்கு Bright Advertising நிறுவனத்திலிருந்து தொகைக்கான ரூ. 18030/–க்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. தொகை வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 985**

அனுமதிக்கப்பட்டது.

( 18 ) இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 26, காட்டூர் காட்டுக்கொட்டாய் கலைவாணி நகர் சின்டெக்ஸ் டேங் மற்றும் பிளாட்பாரம் பழுது சரிசெய்யும் பணிக்கு 24.02.2021 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு ஆர்.எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.19% குறைவு
2) திரு ஏ. மதியழகன், ஒப்பந்ததாரர், பட்டணம், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 6.72% அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.19%) திரு ஆர்.எஸ். ரங்கசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(627/21/இ2)

**தீர்மானம் எண். 986**

அனுமதிக்கப்பட்டது.

( 19 ) இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 1 முதல் 13 வரையுள்ள உவர்நீர் வழங்கும் குழாய்கள், குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களின் பழுதுகள் சரி செய்யும் பணிக்கு 2021–22–ஆம் ஆண்டிற்கு 24.02.2021 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.31% குறைவு
2) திரு ஜெ. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், ஆர்.கவுண்டம்பாளையம், இராசிபுரம்
மதிப்பீட்டைவிட 3.81% அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.31%) திரு என். செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(629/21/இ2)

**தீர்மானம் எண். 987**

அனுமதிக்கப்பட்டது.

( 20 ) இந்நகராட்சிப் பகுதியில் வார்டு எண். 14 முதல் 27 வரையுள்ள உவர்நீர் வழங்கும் குழாய்கள், குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களின் பழுதுகள் சரி செய்யும் பணிக்கு 2021–22–ஆம் ஆண்டிற்கு 24.02.2021 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.32% குறைவு
2) திரு ஜெ. ரவிச்சந்திரன், ஒப்பந்ததாரர், ஆர்.கவுண்டம்பாளையம், இராசிபுரம்
மதிப்பீட்டைவிட 3.81% அதிகம்.

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (0.32%) திரு என். செல்லப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(628/21/இ2)

**தீர்மானம் எண். 988**

அனுமதிக்கப்பட்டது.

(21) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்குத் தேவைப்படும் நீர்த்த சுண்ணாம்புத் தூள், ஜனதாசெம் பவுடர் (வெள்ளை), கலர் பவுடர் மற்றும் பிளீச்சிங் பவுடர் ஆகியவற்றை விநியோகம் செய்யும் பணிக்கு கடந்த 26.2.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| **வ. எண்.** | **நிறுவனத்தின் பெயர்** | **நீர்த்த சுண்ணாம்புத் தூள்** | **ஜனதாசெம் பவுடர் (வெள்ளை)** | **கலர் பவுடர்** | **பிளீச்சிங் பவுடர்** |
|---|---|---|---|---|---|
| 1) | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் | ரூ. 14.00 | ரூ. 24.00 | ரூ. 26.50 | ரூ. 63.00 |
| 2) | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி | ரூ. 13.00 | ரூ. 23.00 | ரூ. 25.00 | ரூ. 61.12 |

வ.எண். 2–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி என்ற நிறுவனத்தினர் ஒப்பந்தப்புள்ளி ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) சட்டமன்ற தேர்தல் 2021–ஐ முன்னிட்டும், அவசர அவசியங் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணியாணையும் தொகையும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1248/21/எச்1)

**தீர்மானம் எண். 989**

அனுமதிக்கப்பட்டது.

(22) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனம் TN 28 BW 9274–ற்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கி சரி செய்யும் பணிக்கு கடந்த 23.2.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் (ரூ.) | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் (ரூ.) |
|---|---|---|---|
| 1) | இன்ஜின் ஆயில், கிரவுன் ஆயில், கியர் பாக்ஸ், ஆயில் சர்வீஸ் செய்து புதிய ஆயில் சர்வீஸ் செய்தல் | 1300/– | 1400/– |
| 2) | கிளட்ச் பிளேட், லோடிங் புதியது மாற்றுதல் | 9600/– | 10600/– |
| 3) | 5 டியூப் லெஸ் டயர் புதியது மாற்றுதல் | 39500/– | 40600/– |
| 4) | ஹைட்ராலிக் பம்பு வேலை செய்தல் | 3000/– | 3100/– |
| 5) | செல்ப் மோட்டார், டைனமோ வேலை செய்தல் | 7100/– | 8000/– |
| 6) | 4 சைடு ஸ்பிரிங் கட்டு அடித்து எக்ஸ்ட்ரா பட்டை கொடுத்தல் | 12600/– | 13000/– |
| 7) | இன்ஜின்பெட், கியர் பாக்ஸ் பெட் புதியது மாற்றுதல் | 6600/– | 6800/– |
| 8) | ஸ்பீடு கார்னர் புதியது மாற்றுதல் | 8500/– | 9000/– |
| 9) | 2 கோட் பெயிண்ட் அடித்து எழுத்து எழுதி ஸ்டிக்கர் ஒட்டுதல் | 9600/– | 10600/– |
| 10) | ரேடியேட்டர் சர்வீஸ் செய்தல் வாட்டர் சர்வீஸ் செய்தல் | 4500/– | 5100/– |
| 11) | 4 வீல் கிரிஸ் மாற்றம் | 9900/– | 10600/– |
| 12) | கேபின் டோர் இடது, வலது லாக் புதியது மாற்றுதல் | 6100/– | 6300/. |
| 13) | புதிய பேட்டரி மாற்றுதல் | 6500/– | 6600/– |
| 14) | ஜாயின்ட் ஸ்டார் புதியது மாற்றுதல் | 2600/– | 3100/– |
| 15) | எலக்ட்ரிக்கல் செக்கப் செய்தல் | 1500/– | 1600/– |
| | **மொத்தம் :** | **128900/–** | **136400/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) சட்டமன்ற தேர்தல் 2021–ஐ முன்னிட்டும், அவசர அவசியங் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணியாணையும் பட்டியல் தொகையும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(13/21/எச்1)

**தீர்மானம் எண். 990**

அனுமதிக்கப்பட்டது.

(23) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனம் TN 28 BW 9706–ற்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு

கடந்த 23.2.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் (ரூ.) | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் (ரூ.) |
|---|---|---|---|
| 1) | இன்ஜின் ஆயில், கிரவுன் ஆயில், கியர் பாக்ஸ், ஆயில் சர்வீஸ் செய்து புதிய ஆயில் சர்வீஸ் செய்தல் | 1300/– | 1400/– |
| 2) | கிளட்ச் பிளேட், லோடிங் புதியது மாற்றுதல் | 9600/– | 10600/– |
| 3) | 5 டியூப் லெஸ் டயர் புதியது மாற்றுதல் | 39500/– | 40600/– |
| 4) | ஹைட்ராலிக் பம்பு வேலை செய்தல் | 3000/– | 3100/– |
| 5) | செல்ப் மோட்டார், டைனமோ வேலை செய்தல் | 7600/– | 8000/– |
| 6) | 4 சைடு ஸ்பிரிங் கட்டு அடித்து எக்ஸ்ட்ரா பட்டை கொடுத்தல் | 12600/– | 13000/– |
| 7) | இன்ஜின்பெட், கியர் பாக்ஸ் பெட் புதியது மாற்றுதல் | 6600/– | 6900/– |
| 8) | ஸ்பீடு கார்னர் புதியது மாற்றுதல் | 8500/– | 9000/– |
| 9) | 2 கோட் பெயிண்ட் அடித்து எழுத்து எழுதி ஸ்டிக்கர் ஒட்டுதல் | 9600/– | 10600/– |
| 10) | ரேடியேட்டர் சர்வீஸ் செய்தல் வாட்டர் சர்வீஸ் செய்தல் | 4500/– | 5100/– |
| 11) | 4 வீல் கிரிஸ் மாற்றம் | 9900/– | 10600/– |
| 12) | கேபின் டோர் இடது, வலது லாக் புதியது மாற்றுதல் | 6100/– | 6300/. |
| 13) | புதிய பேட்டரி மாற்றுதல் | 6500/– | 6600/– |
| 14) | ஜாயின்ட் ஸ்டார் புதியது மாற்றுதல் | 2600/– | 3100/– |
| 15) | எலக்ட்ரிக்கல் செக்கப் செய்தல் | 1500/– | 1600/– |
| | **மொத்தம் :** | **129400/–** | **136500/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) சட்டமன்ற தேர்தல் 2021–ஐ முன்னிட்டு தேர்தல் நடத்தை விதிகள் வர இருப்பதாலும், அவசர அவசியங் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணியாணையும், பட்டியல் தொகையும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(12/21/எச்1)

**தீர்மானம் எண். 991**

அனுமதிக்கப்பட்டது.

(24) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனத்திற்கு TN 28 BW **9646**–ற்கு தகுதிச்சான்று மற்றும் பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த **23.2.2021** அன்று இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் (ரூ.) | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் (ரூ.) |
|---|---|---|---|
| 1) | இன்ஜின் ஆயில், கிரவுன் ஆயில், கியர் பாக்ஸ், ஆயில் சர்வீஸ் செய்து புதிய ஆயில் சர்வீஸ் செய்தல் | 1300/– | 1400/– |
| 2) | கிளட்ச் பிளேட், லோடிங் புதியது மாற்றுதல் | 9600/– | 10600/– |
| 3) | 5 டியூப் லெஸ் டயர் புதியது மாற்றுதல் | 39500/– | 40600/– |
| 4) | ஹைட்ராலிக் பம்பு வேலை செய்தல் | 3000/– | 3100/– |
| 5) | செல்ப் மோட்டார், டைனமோ வேலை செய்தல் | 7100/– | 8000/– |
| 6) | 4 சைடு ஸ்பிரிங் கட்டு அடித்து எக்ஸ்ட்ரா பட்டை கொடுத்தல் | 12600/– | 13000/– |
| 7) | இன்ஜின்பெட், கியர் பாக்ஸ் பெட் புதியது மாற்றுதல் | 6600/– | 6900/– |
| 8) | ஸ்பீடு கார்னர் புதிய பாக்ஸ் பெட் புதியது மாற்றுதல் | 8500/– | 9000/– |
| 9) | 2 கோட் பெயிண்ட் அடித்து எழுத்து எழுதி ஸ்டிக்கர் ஒட்டுதல் | 9600/– | 10100/– |
| 10) | ரேடியேட்டர் சர்வீஸ் செய்தல் வாட்டர் சர்வீஸ் செய்தல் | 4500/– | 5100/– |
| 11) | 4 வீல் கிரிஸ் மாற்றம் | 9900/– | 10600/– |
| 12) | கேபின் டோர் இடது, வலது லாக் புதியது மாற்றுதல் | 6100/– | 6300/– |
| 13) | புதிய பேட்டரி மாற்றுதல் | 6500/– | 6600/– |
| 14) | ஜாயின்ட் ஸ்டார் புதியது மாற்றுதல் | 2600/– | 3100/– |
| 15) | எலக்ட்ரிக்கல் செக்கப் செய்தல் | 2000/– | 1600/– |
| | **மொத்தம் :** | **129400/–** | **136000/–** |

வ.எண். **1**–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) சட்டமன்ற தேர்தலை முன்னிட்டும், அவசர அவசியங் கருதி, நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணியாணையும், பட்டியல் தொகையும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(5346/20/எச்1)

**தீர்மானம் எண். 992**

அனுமதிக்கப்பட்டது.

(25) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனத்திற்கு TN 28 BW 9298–ற்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 23.2.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் (ரூ.) | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் (ரூ.) |
|---|---|---|---|
| 1) | 4 வீல் கிரிஸ், 4 வீல் பிரேக் சரி செய்ய வேண்டும். | 12100/– | 13100/– |
| 2) | ஹைட்ராலிக் பம்பு சர்வீஸ், ஆயில் மாற்றுதல் | 9100/– | 10100/– |
| 3) | கிளட்ச் பிளேட் புதியதாக மாற்ற வேண்டும் | 9900/– | 10100/– |
| 4) | ஆயில் சர்வீஸ், டீசல் பிளக் ஆயில் பிளக் மாற்ற வேண்டும் | 1500/– | 1900/– |
| 5) | ஹைட்ராலிக் சரி செய்ய வேண்டும் | 10500/– | 11000/– |
| 6) | ஸ்பிரிங் கட் அடிக்க வேண்டும் (4 பக்கம்) | 29100/– | 30500/– |
| 7) | 4 டயர் புதியதாக மாற்ற வேண்டும் | 39100/– | 40100/– |
| 8) | வேகக் கட்டுப்பாட்டுக் கருவி பொருத்த வேண்டும். | 7100/– | 8000/– |
| 9) | வர்ணம் பூச வேண்டும் | 11100/– | 12000/– |
| | **மொத்தம் :** | **129500/–** | **136700/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) சட்டமன்ற தேர்தல் 2021–ஐ முன்னிட்டும், அவசர அவசியங் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணியாணையும், பட்டியல் தொகையும் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(510/21/எச்1)

**தீர்மானம் எண். 993**

அனுமதிக்கப்பட்டது.

(26) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் ஆட்டோ (LCV) வாகனத்திற்கு TN 28 BW 9243–ற்கு தகுதிச்சான்று மற்றும் வாகன பழுதுகள் நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 23.2.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் (ரூ.) | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் (ரூ.) |
|---|---|---|---|
| 1) | வர்ணம் பூசுதல் | 9600/– | 10300/– |
| 2) | இன்ஜின் ஆயில் மாற்றுதல் | 1500/– | 1600/– |

| | | | |
|---|---|---|---|
| 3) | 4 வீல் கிரிஸ் தடவுதல் | 19600/– | 20100/– |
| 4) | கிரவுன் ஆயில் சர்வீஸ் செய்தல் | 6000/– | 6300/– |
| 5) | 4 வீல் டயர் டியூப் மாற்ற வேண்டும் | 49600/– | 50500/– |
| 6) | ஹைட்ராலிக் டிப்பர் ஆயில் சர்வீஸ் | 12600/– | 12900/– |
| 7) | வீல் பட்டை பழுது பார்த்தல் | 1960/– | 20700/– |
| 8) | பிரன்ட் லைட் செக்கப் | 7500/– | 7900/– |
| 9) | ஏர் பில்டர் செக்கப் செய்ய வேண்டும் | 3600/– | 3900/– |
| | **மொத்தம் :** | **129600/–** | **134200/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கியுள்ளதால், லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) சட்டமன்ற தேர்தல் 2021–ஐ முன்னிட்டும், அவசர அவசியங் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணியாணையும், பட்டியல் தொகையும் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(151/21/எச்1)

**தீர்மானம் எண். 994**

அனுமதிக்கப்பட்டது.

(27) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டிப்பர் லாரி TN 28 AT 0110–ற்கு தகுதிச்சான்று மற்றும் இதர பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு கடந்த 23.2.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பணியின் விவரம் | லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் (ரூ.) | ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் (ரூ.) |
|---|---|---|---|
| 1) | கிளச் பிளேட் புதியதாக மாற்ற வேண்டும் | 29000/– | 29100/– |
| 2) | 4 வீல் கிரிஸ், 4 வீல் பிரேக் சரி பார்க்க வேண்டும் | 16300/– | 16500/– |
| 3) | ஹைட்ராலிக் பம்பு சர்வீஸ் செய்ய வேண்டும் | 11300/– | 11600/– |
| 4) | பாடி வெல்டிங் செய்ய வேண்டும் | 29000/– | 29100/– |
| 5) | ஆயில் சர்வீஸ் | 4300/– | 4500/– |
| 6) | சீட் கவர் புதியதாக போட வேண்டும் | 7500/– | 7600/– |
| 7) | டீசல் பவுண்ட், டேங் மூடி புதியதாக போட வேண்டும் | 11200/– | 19600/– |
| 8) | வர்ணம் பூசி ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும் | 13500/– | 13600/– |
| 9) | ஸ்பீடா மீட்டர் பொருத்த வேண்டும் | 7400/– | 7600/– |
| | **மொத்தம் :** | **129500/–** | **139200/–** |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை வழங்கியுள்ளதால், லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் என்ற நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3) சட்டமன்ற தேர்தலை முன்னிட்டும், அவசர அவசியங் கருதியும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, பணியாணையும், தொகையும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(152/21/எச்1)

**தீர்மானம் எண். 995**

அனுமதிக்கப்பட்டது.

(28) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் டம்பர் பின் லாரி பதிவு எண். TN 28 AT 8969 என்ற வாகனத்தில் செல்ப் மோட்டார் பழுதடைந்து வாகனம் இயங்கவில்லை. மேற்படி செல்ப் மோட்டாரின் பழுதுகளை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. 2500/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து (SUC) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(987/21/எச்1)

**தீர்மானம் எண். 996**

அனுமதிக்கப்பட்டது.

(29) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிலுள்ள 10 BoV வாகனங்களிலுள்ள பழுதுகளை நீக்கவும் மற்றும் புதிய பேட்டரி பொருத்தும் பணிக்கு கடந்த 18.2.2021 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | ஒரு BoV–க்கு பழுதுநீக்கம் செய்யவும் மற்றும் புதிய பேட்டரி பொருத்துதல். |
|---|---|---|
| 1 | அருண் இந்தியன் மோட்டார்ஸ், சேலம். | ரூ. 43990/– |
| 2 | பிரிமியம் இண்டஸ்டரீஸ் & இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட், திருப்பூர். | ரூ. 43900/– |

வ.எண். 2–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், பிரிமியம் இண்டஸ்டரீஸ் & இன்ஜினியரிங் பிரைவேட் லிமிடெட், திருப்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து (SUC) மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(858/21/எச்1)

**தீர்மானம் எண். 997**

அனுமதிக்கப்பட்டது.

(30) இராசிபுரம் நகராட்சி அண்ணாசாலை துவக்கப் பள்ளியில் சுற்றுச்சுவர் மற்றும் மாடிப்படி அமைத்தல் பணிகள் ரூ. 350000/– மதிப்பீட்டில் மேற்கொள்ள 24.02.2021–இல் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், 27, வி.நகர் ரோடு–17,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 1.31% அதிகம்
2) திரு பி. சுந்தரம், ஒப்பந்ததாரர், ஆர்.கவுண்டம்பாளையம்,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.09% குறைவு.

மதிப்பீட்டைவிட 0.09% குறைவான திரு பி. சுந்தரம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.09% குறைவான திரு பி. சுந்தரம் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/615/21)

**தீர்மானம் எண். 998**

அனுமதிக்கப்பட்டது.

(31) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 24 மாதா கோவில் தெரு மற்றும் வார்டு எண். 25 காளியம்மன் கோவில் தெரு கழிப்பிடங்களில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் ரூ. 200000/– மதிப்பீட்டுப் பணிக்கு 24.02.2021–இல் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், 27, வி.நகர் ரோடு–17,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 1.00% அதிகம்
2) திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரர், 7/A, வி.நகர் ரோடு–10,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.07% குறைவு.

மதிப்பீட்டைவிட 0.07% குறைவான திருமதி ஆர். ஷாகிதா ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.07% குறைவாக வழங்கியுள்ள திருமதி ஆர். ஷாகிதா ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/616/21)

**தீர்மானம் எண். 999**

அனுமதிக்கப்பட்டது.

(32) இராசிபுரம் நகராட்சி வார்டு எண். 6 கிருஷ்ணன் தெரு மற்றும் வார்டு எண். 10 வி. நகர் ரோடு கழிப்பிடங்களில் அடிப்படை வசதிகள் மேம்பாடு செய்யும் ரூ. 200000/– மதிப்பீட்டுப் பணிக்கு 24.02.2021–இல் பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர், 27, வி.நகர் ரோடு–17,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 1.00% அதிகம்

2) திருமதி ஆர். ஷாகிதா, ஒப்பந்ததாரர், 7/A, வி.நகர் ரோடு–10,
இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.07% குறைவு.

மதிப்பீட்டைவிட 0.07% குறைவான திருமதி ஆர். ஷாகிதா ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்றுள்ள இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.07% குறைவாக வழங்கியுள்ள திருமதி ஆர். ஷாகிதா ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/617/21)

**தீர்மானம் எண். 1000**

அனுமதிக்கப்பட்டது.

( 33 ) இந்நகராட்சிக்கு எழுதுபொருட்கள், ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் தங்கள் நிறுவனம் மூலம் எழுதுபொருட்கள், கணினி உபகரணங்கள், படிவங்கள் மற்றும் புத்தகங்கள் மிக சிறந்த முறையில் தரமாக விற்பனை செய்வதால் ஆர்டர் வழங்க கோரி 8.01.2021 அன்று கடிதம் தங்களுக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி நிறுவனத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் விதவைகள், ஆதரவற்றோர் ஆகிய மகளீர்களை உறுப்பினர்களாக சேர்த்து வேலை வாய்ப்பு அளித்து வருவதால், இந்த சங்கத்தில் அரசு துறைகளும் மற்றும் அரசை சார்ந்த முறை நிறுவனங்களும் விலைப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசாணை எண். 283, நாள் 18.06.1998–இல் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நகராட்சிக்கு எழுது பொருட்கள், பதிவேடுகள், சேவை மையத்திற்குத் தேவையான படிவங்கள் மற்றும் சொத்துவரி, குடிநீர் வரி, ரசீதுகள் அரசாணை எண். 283 நாள் 18.06.1998–இன்படி மேற்படி நிறுவனமான ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும், பணியாணை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(101/21/பி3)

**தீர்மானம் எண். 1001**

அனுமதிக்கப்பட்டது.

( 34 ) இந்நகராட்சிக்கு எழுதுபொருட்கள், ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் தங்கள் நிறுவனம் மூலம் எழுதுபொருட்கள், கணினி உபகரணங்கள், படிவங்கள் மற்றும் புத்தகங்கள் மிக சிறந்த முறையில் தரமாக விற்பனை செய்வதால் ஆர்டர் வழங்க கோரி 8.01.2021 அன்று கடிதம் தங்களுக்கு வரப்பெற்றுள்ளது.

மேற்படி நிறுவனத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் பெண்கள் விதவைகள், ஆதரவற்றோர் ஆகிய மகளீர்களை உறுப்பினர்களாக சேர்த்து வேலை வாய்ப்பு அளித்து

வருவதால், இந்த சங்கத்தில் அரசு துறைகளும் மற்றும் அரசை சார்ந்த முறை நிறுவனங்களும் விலைப்புள்ளி கோராமல் நேரடியாக கொள்முதல் செய்ய தமிழ்நாடு அரசாணை எண். 283, நாள் 18.06.1998–இல் ஆணை பிறப்பித்துள்ளது.

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிலுள்ள அனைத்துப் பிரிவிலுள்ள பிரிண்டர்களின் டோனர் மற்றும் ரிப்பன் கேட்ரேஜ்கள் வாங்க அரசாணை எண். 283 நாள் 18.06.1998–இன்படி மேற்படி நிறுவனமான ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்யவும், பணியாணை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவுத் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(237/21/பி3)

**தீர்மானம் எண். 1002**

அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சு. பிரபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.